தமிழ்நாடு சட்டப்பேரவை

வெள்ளிக்கிழமை 1969 மார்ச் 7

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை **மண்டபத்தில்** காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

* வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 206 முதல் **215** வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Raja Sarfoji College, Thanjavur.

* 216 *Q.*—Dr. H. V. Hande : and
Thiru N. Kasiraman : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the date on which the Raja Sarfoji College, Thanjavur, was taken over by this Government;

(*b*) whether any representation has been made by the teaching and non-teaching staff of the college to absorb them in Government service; and

(*c*) if so, the action taken by this Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 1—7—1965.

(இ) ஆம்.

(உ) பணியாளர்களை அரசுப் பணியில் இணைத்துக்கொள்வதுபற்றிய கோட்பாடுகளை வகுத்து அரசு இப்போது ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ் நாடகக் கலை வளர்ச்சி

* 217 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடகத் துறை வளர்ச்சிக்கென மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஒரு தனித் துறை ஏற்படுத்துவதற்குரிய செயற்குறிப்பு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்பெறும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தமிழ் நாடகத் துறை வளர்ச்சிக்கு மதுரை நகரம் சிறப்புப் பெற்றது. தற்போது அங்கே பல்கலைக்கழகம் இருக்கிற காரணத்தால் பல்வேறு நாடகத் துறை வல்லுநர்கள் இந்தப் பல்கலை கழகத்தில் இத்தகைய துறை இருந்தால் மேலும் நாடகத் துறை வளரும் என்ற நம்பிக்கையோடிருக்கிறார்கள். எனவே, அரசு இந்தத் துறையை இங்கு வைப்பதற்குப் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாடகத் துறையின் வளர்ச்சிக்குத் தனியாக அமைப்புகள் இருக்கின்றன. பல்கலைக் கழகத்தைப் பொறுப்பு ஏற்று நடத்துகிற சிண்டிகேட் இதைப்பற்றி முயற்சி எடுக்கவேண்டும். அப்படி அவர்கள் முயற்சி எடுத்தால் அரசு அதற்கு உதவி செய்யும்.